**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS.73/2024**

நாள்.02.07.2025

**வா.சா.1. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் எனது மனைவிக்காக சாட்சியம் அளிக்கிறேன். எனது மனைவி வீட்டு குடித்தனம் என்று வீட்டில் தான் இருந்து வருகிறார் என்றால் வீட்டில் தான் இருந்து வருகிறார். நானும் எனது மனைவியும் ஒன்றாக தான் வசித்து வருகிறோம். வரவு செலவு கணக்கு ஒன்றாக தான் பார்த்து வருகிறோம். எனது மனைவி என்ன படித்துள்ளார் என்றால் 10-ஆம் வகுப்பு. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பெட்டி கடை வைத்திருந்தேன். தற்போது எனது தம்பி மகனுக்கு கடை வைத்து கொடுத்துள்ளேன். நான் தற்சமயம் வேறு தொழில் ஏதும் செய்து வருகிறேனா என்றால் இல்லை. நான் எத்தனை குழி நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எத்தனை குழி என்று எனக்கு தெரியவில்லை. சொத்தில் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. முத்திரை வில்லை பத்திரத்தை எப்போது யாரிடம் வாங்கினேன் என்றால் 10.12.2020-ல் கோல்டன் நகை கடையில் வாங்கினேன். கிரய ஒப்பந்தம் எழுதிய போது யார் யார் இருந்தோம் என்றால் நான், எனது மனைவி, பிரதிவாதி மற்றும் அவரது மனைவி ஆகியோர்கள் இருந்தோம். நான் கிரய ஒப்பந்தப் பத்திரத்தின் நகலை பிரதிவாதியிடம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் பத்திரம் தான் நாங்கள் எழுதிய பத்திரம் ஆகும். என்னிடம் காட்டப்படும் 10.12.2020–ல் ஏற்பட்ட கிரய ஒப்பந்த பத்திரம் நகலில் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி லலிதா என்பவரின் கையெழுத்துகள் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.